

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 74 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 06 – திங்கள்கிழமை 23 அக்டோபர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 74: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 06 - Monday 23 October 2023 - Kovai ★★ 8 Pages ₹5.00


# “நீட் விலக்கு, நம் இலக்கு”!

## மாபெரும் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின்!




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2023) கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, நீட் விலக்கை வலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கையெழுத்திட்டு “நீட் விலக்கு நம் இலக்கு” பெட்டியிலிட்டார்.

**சென்னை, அக். 23 -**

**நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தி.மு.க. சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளது. இந்த கையெழுத்து இயக்கத்தினை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நீட் நுழைவுத் தேர்வால், மருத்துவராக வேண்டும் என்ற லட்சியத்துடன் படித்து வந்த தமிழ்நாட்டு மாணவர்களில் 20க்கும் மேற்பட்டோர் தங்களின் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு அமைந்த பிறகு, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி பல்வேறு வகையில் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி, அண்மையில் தமிழ்நாடு தழுவிய அளவில் மாபெரும் உண்ணாநிலை அறப் போராட்டம் நடைபெற்றது.

> **“நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது.”**

அதன் தொடர்ச்சியாக, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது. சென்னை செனாய் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, நீட் விலக்கு! நம் இலக்கு! எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து முதல் கையெழுத்தை போட்டார்.

நீட் தேர்வை ஒழிக்க மக்கள் போராட்டமாக மாற்றும் வகையில் மாபெரும் மக்கள் இயக்கமாக கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளது. நீட் ஒழிப்புக்கான இந்த முன்னெடுப்பு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில், பொதுமக்கள், பெற்றோர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள், சமூக அமைப்புகள், அரசியல் கட்சித் தலைவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று கையெழுத்திட்டு வருகின்றனர்.

அதன்படி, 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகள் பெறப்பட உள்ளன. தமிழ்நாட்டின் கல்வி உரிமையையும் நம் மாணவர்களின் மருத்துவராகும் கனவையும் காப்பதற்காக இடப்படும் ஒவ்வொரு கையெழுத்தும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

# நாங்கள் ஆரிய ஆதிக்கத்திற்குத்தான் எதிரிகள்; ஆன்மிகத்திற்கு நிச்சயமாக அல்ல!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டமான பிரகடனம்!

**சென்னை, அக். 23 -**

**“நாங்கள் ஆரிய ஆதிக்கத்திற்குத்தான் எதிரிகள்; ஆன்மிகத்திற்கு நிச்சயமாக அல்ல” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டவட்டமாக பிரகடனப் படுத்தியுள்ளார்.**

நேற்று முன்தினம் (21.10.2023) காலை, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் சென்னை செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்ட “#Wing2Point0 - சமூக வலை தளத் தன்னார்வலர்கள் சந்திப்பு”இல் கலந்துகொண்டார்.

முன்னதாக, கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் மாணவரணி மற்றும் மருத்துவரணியுடன் இணைந்து நடத்தப்படும் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தில் கழகத் தலைவர் அவர்கள் தமது கையெழுத்தையும் பதிவு செய்தார்.

இந்நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு: -

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் என்னிடம் வந்து, “சோஷியல் மீடியாவில் தீவிரமாக செயல்படும் தன்னார்வலர்கள் உங்களைச் சந்திக்க வேண்டும்” என்று சொன்னார். அவர் சொன்ன உடன், “அவர்களைச் சந்திக்க நான்தான் மிகவும் ஆசையாக இருக்கிறேன்” என்று சொல்லி, உங்களைச் சந்திக்க இன்றைக்கு வந்திருக்கிறேன். என்னுடைய பெயர் - நான் யார், என்னுடைய பயோடேட்டா என்ன எல்லாம் உங்களுக்கு நன்றாக தெரியும். ஆனால், உங்களில் பலரின் பெயர் கூட எனக்குத் தெரியாது.

சிலரின் ஃபேஸ்புக் - ட்விட்டர் ஐடி தெரியும். ஆனால், அது இவர்கள்தான் என்று தெரியாது. பெரும்பாலும், உங்கள் அனைவரின் பதிவுகளையும் என்னுடைய டைம்லைனில் படித்திருப்பேன்; ரசித்திருப்பேன்; சில நேரம், “அடடா! எவ்வளவு நன்றாக எழுதியிருக்கிறார்கள்” என்று வியந்திருக்கிறேன், சிரித்திருக்கிறேன்;




கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2023) சென்னை, ஷெனாய் நகரில் நடைபெற்ற கழக தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் விங் 2.0 ஒருங்கிணைப்பில் சமூக வலைதள செயல்பாட்டாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், ஆலோசகர் கோவி. லெனின், சென்னை மண்டல பொறுப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கும்மிடிப்பூண்டி சேகர் மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிலர் நீண்ட பதிவுகள் எழுதுவீர்கள். சிலர் இரத்தினச் சுருக்கமாக, க்ரிஸ்ப்பாக எழுதுவீர்கள். சிலர் மீம்ஸ் போடுவீர்கள். சிலர் பழைய வரலாற்றையெல்லாம் மறுபடியும் ஞாபகப்படுத்துவீர்கள். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்டைல்!

**அது எல்லாமே தி.மு.க. ஸ்டைல்!**

ஆனால், அது எல்லாமே தி.மு.க. ஸ்டைல்! அதனால், உங்கள் ஊர் பெயர் தெரியவில்லை என்றால் என்ன? நாம் எல்லோரும் தி.மு.க.காரர்கள் தானே! தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள்தானே! உங்களில் ஒருவன்தான் நானும்!

இந்த பந்தமும் - பாசமும் மட்டும் என்றைக்கும் மாறவே மாறாது! என் டைம்லைனில் சிலரின் பதிவுகள் மிஸ் ஆனாலும், ஐ.டி.விங், செய்தித் துறை, உளவுத்துறை, என்னுடைய நண்பர்கள் என்று பலரும் உங்களின் பதிவுகளை எனக்கு அனுப்பி வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த வகையில்,


தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# நீட் ஒழிப்பிற்கான இந்த கையெழுத்து இயக்கத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக முன்னெடுத்து காட்டுவோம்!

## ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து தொடக்க நிகழ்ச்சியில் இணைய தளத்தை தொடங்கி வைத்து இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.23-**

**நீட் ஒழிப்பிற்கான இந்த கையெழுத்து இயக்கத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக முன்னெடுத்துக் காட்டுவோம் என்றும், ஒன்றிய அரசு இனியும் அலட்சியம் செய்தால் ஜல்லிக்கட்டுப் போராட்டம் போல் வீரமிக்க போராட்டம் நடத்துவோம் என்றும் நீட் விலக்கு நம் இலக்கு கையெழுத்து தொடக்க நிகழ்ச்சியில் இணைய தளத்தை தொடங்கி வைத்து உரையாற்றுகையில் இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

நீட் தேர்வுக்கு எதிரான ‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற ‘மாபெரும் கையெழுத்து இயக்கம், கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற இதன் தொடக்க நிகழ்ச்சியில் அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு மக்கள் தங்களின் கையெழுத்தை பதிவு செய்வதற்கான இணைய தளத்தை தொடங்கி வைத்தார்.

“இந்தக் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்து, முதலில் கையெழுத்திட்ட நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை தமிழ்நாடு முழுவதும் ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தும் வகையில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ‘நீட் விலக்குநம் இலக்கு’எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை மூன்று அணிகளும் சேர்ந்து இன்று நாம் தொடங்கியுள்ளோம்.

### மருத்துவர்கள் அறிவுறுத்தல்!

எனக்குக் கடந்த இரண்டு, மூன்று நாட்களாக உடல்நிலை சரியில்லை. கண்ணில் இன்ஃபெக்சன். நான்கைந்து நாட்கள் எங்கேயும் போகக்கூடாது, எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளக் கூடாது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். ஆனால், 21ஆம் தேதி இந்த நீட் ரத்துக்கான கையெழுத்து இயக்கம் என்ற நிகழ்ச்சி ஏற்கனவே முடிவாகிவிட்டது, கண்டிப்பாக நான் செல்ல வேண்டும் என்று சொல்லி, அந்த மருத்துவர்கள் எனக்குத் தொடர்ந்து மருத்துவம் பார்த்து இப்பொழுது இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளேன். எனக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர்களில் ஒருவர் கூட நீட் தேர்வெழுதி டாக்டர் ஆனவர்கள் கிடையாது. அவர்கள் அளித்த மருத்துவத்தினால் தான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை நான் பெற்றிருக்கி றேன்.

நான் அணிந்திருக்கும் இந்தக் கண்ணாடி கூட தற்காலிகமானதுதான். இரண்டு மூன்று நாட்களுக்கு கண்ணில் அதிகமான வெளிச்சம் படக்கூடாது, கண்ணாடி போட்டுக்கொள்ளுங்கள் என்ற அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், இந்த நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டுள்ளேன்.

கடந்த ஆகஸ்ட் 20ஆம் தேதி, தமிழ்நாடு முழுவதும் நீட் தேர்வுக்கு எதிராக மாபெரும் உண்ணாநிலை அறப்போராட்டத்தை நாமெல்லாம் எந்த உணர்வோடு மேற்கொண்டோமோ, அதே உறுதியுடன், இன்றைக்கு இந்தக் கையெழுத்து இயக்கத்தை நாம் துவங்கியுள்ளோம். இங்கு மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் அனைத்து கழக மாவட்டங்களிலும் இன்று இந்த இயக்கத்தைத் துவங்கியிருக்கின்றோம். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணிகள் நடத்துகிற கையெழுத்து இயக்கம் என்றாலும், இதனை மாபெரும் மக்கள் இயக்கமாகக் கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் நீட் தேர்வை நாம் ஒழிக்க வேண்டும்.

### பாசிஸ்ட்டுகளை எதிர்த்துப் போராட்டம்!

இந்தித் திணிப்பு தொடங்கி, இப்போது புதிய கல்விக் கொள்கை (National Educational Policy) வரை நம்முடைய கல்வி உரிமையை எப்படியாவது பறிக்க வேண்டுமென்று பாசிஸ்ட்டுகள் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருக்கிறார்கள். அவற்றை எதிர்த்து நாமும் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறோம்.

நீட் தேர்வுக்கு எதிராகக் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசோ, இன்னும் அதிகமாக எப்படி நம் கல்வி உரிமையைச் சிதைக்கலாம் என்று சிந்திக்கின்றது. நீட் தேர்வால் தமிழ்நாட்டில் ஏற்படுகிற பாதிப்பைப் புரிந்து கொள்ள ஒன்றிய அரசு மறுக்கின்றது. நீட்டுக்கு எதிராக, நாம் எதிர்க்கட்சியாக இருந்தப்போது மக்கள் மன்றத்தில் போராடினோம். பிறகு ஆளுங்கட்சியாக வந்தபிறகு சட்டமன்றத்தில் செய்ய வேண்டிய அனைத்துப் பணிகளையும், கடமைகளையும் உண்மையாகச் செய்திருக்கின்றோம்.

நீட் விலக்கு மசோதாவை செப்டம்பர் 2021இல் நிறைவேற்றினோம். அதை நம்முடைய ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பினார். மறுபடியும் பிப்ரவரி 8, 2022இல் மீண்டும் சட்டமன்றத்தில் நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றினோம். இப்போது அந்த மசோதா 21 மாதங்களாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது. கடந்த ஆகஸ்ட் மாதம்கூட, அந்த மசோதாவுக்கு ஒப்புதல் தரவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

நீட் தேர்வால், அனிதாவில் ஆரம்பித்து, ஜெகதீஸ்வரன் வரைக்கும் இதுவரை 22 உயிர்கள் பறிபோயிருக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் இந்தத் தற்கொலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தற்கொலைகளை நிறுத்த வேண்டும்; அதற்கு நம் மாணவர்களின் கல்வி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கையெழுத்து இயக்கத்தை நாம் தொடங்கியிருக்கின்றோம்.

இங்கே இந்தக் கையெழுத்து இயக்கத்தை நான் மட்டும் தொடங்கவில்லை. இங்கே இருக்கக்கூடிய அத்தனைபேரும் நீங்கள் ஒவ்வொருவரும் துவங்கியிருக்கிறீர்கள். எனவே, இந்தக் கையெழுத்து இயக்கத்தின் வெற்றி உங்களுடைய வெற்றி, மாணவர்களுடைய வெற்றி... கல்வி உரிமையின் வெற்றி.

## ஒன்றிய அரசு இனியும் அலட்சியம் செய்தால் ஜல்லிக்கட்டுப் போராட்டம் போல் வீரமிக்க போராட்டம் நடத்துவோம்!

### முட்டை எடுத்தால் டாக்டர் ஆகிவிடாலம்!

‘நீட் வந்தால் தரமான டாக்டர்ஸ் கிடைப்பாங்க என்று சொன்னார்கள். மெடிக்கல் காலேஜ்ல பணம் வாங்கிட்டுச் சீட் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இப்ப என்ன நடந்துக்கிட்டு இருக்கு? முதுகலை மருத்துவப் படிப்புக்கான (P.G medical course) நீட் தேர்வில் எத்தனை சதவிகிதம் எடுக்க வேண்டும் எனத் தெரியுமா? முட்டை எடுத்தால் போதும் டாக்டர் ஆகிவிடலாம். முட்டை பர்சென்டைல். முட்டை பர்சன்டைல் வாங்கினாலே போதும், மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு போதும் என உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

அதாவது, சும்மா போய் நீட் தேர்வை எழுதிட்டு வந்தாலே போதும், அப்புறம் பணம் கொடுத்து, PG மெடிக்கல் சீட் வாங்க முடியும். இதெல்லாம் எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம், கேலிக்கூத்து? உலகத்தில் இந்த மாதிரி எங்காவது நடத்தது உண்டா? கொஞ்சம் நீங்கள் அத்தனைப் பேரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த மாதிரியான நேரங்களில்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற நமது தலைவர்களின் உழைப்பை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நமக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாங்க, உழைத்திருப்பாங்க, அவங்க எல்லாம். அவர்களுடைய உழைப்பால்தான் தமிழ்நாடு இன்றைக்கு கல்வியிலும் - சுகாதாரத்திலும் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

குஜராத்தில் சென்ற வருடம் நம்முடைய ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஒரு மருத்துவக் கல்லூரியைத் திறப்பதற்கான நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில் அவர் உரையாற்றும்போது சொல்கிறார். குஜராத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி என்பது அவருடைய கனவு என்று பேசுகிறார்.

குஜராத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி துவங்க வேண்டுமென்று அதுதான் அவருடைய கனவு என்று எப்போது பேசுகிறார், சென்ற வருடம். ஆனால், இதையெல்லாம் 2006ஆம் ஆண்டிலேயே செய்து முடித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்தளவிற்கு மருத்துவக் கட்டமைப்பை பார்த்து பார்த்து அழகாகச் செதுக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

ஜனநாயகத்தின் மீது இருக்கின்ற நம்பிக்கையில்தான் இந்தக் கையெழுத்து இயக்கத்தை நம்முடைய இளைஞர் அணி - மருத்துவ அணி - மாணவர் அணி மூன்று அணிகளும் சேர்ந்து துவங்கியிருக்கிறோம். நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்களிடம் கையெழுத்து வாங்கக் கூடிய ஜனநாயக இயக்கத்தை இன்று தொடங்கியிருக்கின்றோம்.

### அனைவரையும் சந்தித்து கையெழுத்துப் பெறுவோம்!

கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் கிளைக்கழகத்துடன் இணைந்து இந்தக் கையெழுத்து இயக்கத்தை நடத்துங்கள், என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாட்டில் அனைத்துக் குடும்பங்களையும், அனைத்து மாணவர்களையும், அனைத்து பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் சந்தித்து நாம் இந்தக் கையெழுத்தைப் பெற வேண்டும்.

வெறும் எண்ணிக்கைக்காக மட்டுமல்லாமல் நீட் தேர்வால் ஏற்படுகின்ற பாதிப்புகளை எடுத்துச் சொல்லி பொதுமக்களின் கையெழுத்துகளைப் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். நீட் தேர்வால் தங்களின் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோரைச் சந்தித்து, கழகத்தின் இந்த முயற்சியை எடுத்துச் சொல்லுங்கள். அவர்களையும், கையெழுத்திட செய்யுங்கள். ஒருவரிடம் கையெழுத்து வாங்கும் போது, அவர்களிடம் இன்னும் 10 பேர்களிடம் கையெழுத்து வாங்குகின்ற நிலையை ஏற்படுத்துங்கள். நீட்டின் தீமைகளை எடுத்துக் கூறுங்கள்.



கல்லூரி நிர்வாகங்களிடம் அனுமதி வாங்கி, கல்லூரிகளுக்குப் போய் மாணவர்களிடம் நீட்டுக்கு எதிராக கையெழுத்து நாம் வாங்க வேண்டும். ஏனென்றால், மாணவர்களுக்கு நீட் தேர்வால் ஏற்படக் கூடிய தீமைகள் நன்றாகவே தெரியும். அவர்களிடம் நீட் ஒழிப்புக்காக திராவிட முன்னேற்ற கழகம் செய்து வரும் ஒவ்வொரு பணியையும் எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டில் நீட் தேர்வால் இன்னொரு சாவு ஏற்படக்கூடாது என்பதை நாம் நடத்திக்காட்ட வேண்டும்.

இந்தக் கையெழுத்தை பெறுவதற்கு நாம் இரண்டு வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். ஒன்று இணையதளம் மூலம் நீட் ரத்துக்காகக் கையெழுத்திடலாம். மற்றொன்று போஸ்ட் கார்டு மூலமாகக் கையொப்பமிட்டு, அதனை வழங்கலாம். இதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இணையதளத்திற்குச் சென்று, உங்களுடைய பெயர் கைபேசி எண் மாவட்டம் தொகுதி ஆகியவற்றைப் பதிவிட்டு, டிஜிட்டல் முறையில் கையெழுத்திடலாம். அதே போல, போஸ்ட் கார்டில் நீட் ஒழிப்புக்கான கையெழுத்தை இட்டு, அதனைத் திருப்பி அளிக்கலாம்.

ஒன்றிய அரசு தொடர்ந்து நம்மையும் நம் மாநில அரசினுடைய முயற்சிகளையும் அலட்சியம் செய்துகொண்டே இருந்தால், அடுத்து தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போராட்டம் மாதிரியான ஒரு வீரமிக்கப் போராட்டத்தைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இதை நான் இங்கு ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கையாகவே கூற விரும்புகின்றேன். கையெழுத்து இயக்கம் நடத்துகின்றோம். இதன் மூலம் 50 லட்சம் கையெழுத்து வாங்குகின்றோம் என்றால், 50 லட்சம் பேனாக்கள் உயர்ந்து நிற்கின்றது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த 50 லட்சம் பேனாக்களின் மொத்த உருவம்தான் நமது முத்தமிழறிஞர் கலைஞரின் அந்த ஒற்றைப் பேனா! பேனாவாலும் தன்னுடைய கையெழுத்தாலும் தமிழ்நாட்டின் திசைவழியை மாற்றி அமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழித்தோன்றல்கள்தான் நாம். அதை நீங்கள் உணர வேண்டும்.

### கடைசி மூச்சுள்ளவரை போராடுவோம்!

இந்திய ஒன்றியத்துக்கே வழிகாட்டக் கூடிய திராவிட மாடல் அரசைத் தந்து கொண்டிருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் வழிநடத்தப்படுபவர்கள்தான் நாம். நம்முடைய கடைசி மூச்சு இருக்கிற வரைக்கும், தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் நமது மாணவர்களின் கல்வி உரிமைக்காகவும் - நீட் தேர்வு ஒழிப்புக்காகவும் தொடர்ந்து போராடிக் கொண்டேதான் இருப்போம்.

மக்கள் உணர்ச்சிக்கு நிகரான ஒரு வலிமையான ஆயுதம் இன்னும் இந்த உலகத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மக்கள் உணர்ச்சி ஒட்டுமொத்தமாக நீட் தேர்வுக்கு எதிராக உள்ளது என்பதை நம்முடைய ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில், நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அ.தி.மு.க.வினரும் வாருங்கள் நீட் ஒழிப்புக்காக சேர்ந்து போராடலாம் என்று நான் ஏற்கனவே கூறியிருந்தேன். திரும்ப மீண்டும் இங்கே கூற விரும்புகின்றேன். அந்தக் கிரெடிட்டினை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் நீட் தேர்வை ஒழித்தால் போதும் என்று அழைப்பு விடுத்தேன்.

இப்போது மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன். வாருங்கள் இந்தக் கையெழுத்து இயக்கத்தில் பங்கெடுங்கள். கடந்த காலங்களில் தமிழ்நாட்டின் பொதுப் பிரச்சினைகளுக்கு, அனைத்துக்கட்சிகளும் இணைந்து டெல்லிக்கு சென்று எப்படிக் கோரிக்கைகளை வைத்தோமோ, அதே போல நீட் ரத்துக்காகப் பெறப்படும் கையெழுத்துகளையும், நாம் எல்லோரும் சேர்ந்தே குடியரசுத் தலைவர் அவர்களிடம் ஒப்படைப்போம்.

பா.ஜ.க.வோடு கூட்டணியில் இருக்கும் போதுதான் உங்களால எதுவும் பண்ண முடிய வில்லை. இப்போதான் கூட்டணியிலிருந்து வெளியில் வந்துட்டீங்க. அதுவும் தமிழ்நாட்டின் உரிமையைக் காக்கத் தான் பா.ஜ.க கூட்டணிலிருந்து வெளியேறு கிறோம்னு வெளியில் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

### அ.தி.மு.க.வும் பங்கேற்க வேண்டும்!

ஆகவே, தமிழ்நாட்டின் உரிமைக்காக, மாணவர்களுடைய கல்வி உரிமைக்காக நீட் விலக்குக்காக குடியரசுத் தலைவரை வலியுறுத்துகிற வகையிலான இந்தக் கையெழுத்து இயக்கத்தில் அ.தி.மு.க.வும் பங்கேற்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அழைப்பு விடுக்கின்றேன்.

இது ஏதோ தி.மு.கவின் பிரச்சினை என்று யாரும் நினைக்க வேண்டாம், இது தமிழ்நாட்டு மாணவர்களுடைய பிரச்சனை. தமிழ்நாட்டு உரிமையைக் காக்க வேண்டும் என்ற உணர்வோடு அ.தி.மு.க மட்டுமல்ல, யார் வேண்டுமானாலும் இந்தக் கையெழுத்து இயக்கத்தில் பங்கேற்கலாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நீட் ஒழிப்புக்கான கையெழுத்து இயக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியிருந்தாலும், இதனை மாபெரும் மக்கள் இயக்கமாகத்தான் முன்னெடுத்துச் செல்ல விரும்புகின்றோம். நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் இடுகிற இந்த ஒவ்வொரு கையெழுத்தும், தமிழ்நாட்டுக் கல்வி உரிமைப் போராட்டத்தின் உயிரெழுத்தாக என்றென்றும் நிலைத்திருக்கும்.

### சாவியும் - சுத்தியும்

இந்த நேரத்தில் ஒரு சின்னக் கதையைச் சொல்ல விரும்புகின்றேன். ஒரு முறை, சாவியைப் பார்த்து, சுத்தியல் கேட்டது. “உன்னைவிட நான் பெரிதாக இருக்கிறேன், வலிமையா இருக்கேன். ஆனாலும் பூட்டைத் திறக்க நான் கஷ்டப்படுறேன். நீ மட்டும் எப்படிப் பூட்டை எளிதாகத் திறக்கிறாய்?” என்று கேட்டது.

அதற்கு சாவி பதில் சொன்னது, ``நீ என்னைவிடப் பலசாலிதான். என்னைவிட நீ உருவத்தில்கூடப் பெரிய ஆள்தான். ஆனால், பூட்டை திறப்பதற்கு நீ அதன் தலையில் அடிக்கிறாய். ஆனால், நானோ அந்தப் பூட்டின் இதயத்தைச் சென்று தொடுகிறேன். அதனால்தான் என்னால் எளிதாகத் திறக்க முடிகிறது” என்று சாவி சொன்னது.

### இளைஞர் அணி மாநாட்டில் கையெழுத்துக்களை தலைவரிடம் ஒப்படைப்போம்!

எனவே, பா.ஜ.க. என்கிற சுத்தியல் எவ்வளவு ஓங்கி ஓங்கி அடித்தாலும், அதனால் தமிழர்களின் இதயத்தைத் திறக்க முடியாது. காரணம், தமிழர்களின் இதயத்தைத் தொடும் திராவிடக் கொள்கை என்னும் சாவியை தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் தி.மு.க.விடம் நம்முடைய தலைவரிடம், முதலமைச்சரிடம் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார்கள்.

எனவே, தமிழ்நாட்டின் கல்வி உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. நம்முடைய கல்வி உரிமையைச் சிதைப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்பதற்கு அடையாளம்தான் இந்தக் கையெழுத்து இயக்கம். இதனை நாம் மிகச்சிறப்பாக நடத்திக் காட்டிட வேண்டும்.

நீட் ஒழிப்புக்காகப் பெறப்படும், இந்தக் கையெழுத்துகள் அனைத்தும், சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டின் போது நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்படும். அதன்பிறகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் கையெழுத்து இயக்கமானது, வரலாற்றில், என்றைக்கும் நிலைத்திருக்கும். இதில் பங்கேற்கும் நீங்கள் ஒவ்வொருவரும், வரலாற்றில் இடம்பெற கூடியவர்கள். தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தமிழ்நாட்டின் கல்வி உரிமையைப் பாதுகாக்க - டெல்லிக்கு நம்முடைய கையெழுத்துகள் பறக்கட்டும்.

நீட் தேர்வை ஒழித்து, நம் கல்வி உரிமை காப்போம் என்று கூறி வந்திருக்கக்கூடிய அனைத்துப் பேச்சாளர்களுக்கும், அனைத்து அணிகளுடைய நிர்வாகிகளுக்கும் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த உங்கள் அத்தனை பேருக்கும், கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கங்களையும் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்த பொதுப் பள்ளிகளுக்கான மாநிலப் பொதுச் செயலாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு. ஊடகவியலாளர் தமிழ் கேள்வி செந்தில்வேல். திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி, நீட் எதிர்ப்பு போராளி அனிதாவின் சகோதரர் மணிரத்னம் ஆகியோர் நீட் தேர்வு எதிர்ப்பு குறித்தும் இந்தக் கையெழுத்து இயக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும் உரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தயாநிதி மாறன், கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், மருத்துவர் எழிலன், ஆர்.டி.சேகர், எபினேசர், பிரபாகர ராஜா, மாவட்ட செயலாளர்கள் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., இளைய அருணா, இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், பிரபு கஜேந்திரன், மருத்துவ அணியின் துணை செயலாளர் கலைகதிரவன், பகுதிக் கழகச் செயலாளர்கள் மதன் மோகன், வினோத் வேலாயுதம், வர்த்தகர் அணி செயலாளர் அண்ணன் காசி முத்து மாணிக்கம், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் கௌதமன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களான ராஜா அன்பழகன் பிரகாஷ், மதன் உள்பட மூன்று அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். முன்னதாக மாணவர் அணியின் இணைச் செயலாளர் மோகன் வரவேற்புரையாற்றினார். இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

சென்னையில் இந்த நிகழ்ச்சி நடந்த அதே சமயம் அனைத்து கழக மாவட்டங்களிலும் மாவட்டக் கழக செயலாளர்கள் தலைமையில் இந்த கையெழுத்து இயக்கத் தொடக்க நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் சிறப்புப் பேச்சாளர்கள் நீட் தேர்வு ரத்து செய்யப்படவேண்டியதன் அவசியம் குறித்து உரையாற்றினர்.



## சாதி வாரிக் கணக்கெடுப்பு!

# வலியுறுத்தி பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக். 23-**

**“இந்தியாவில் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டிட, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டும்” - என வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**



இந்தியாவில் சமூகநீதியை நிலைநாட்டி, வளர்ச்சியின் பலன்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்குக் கொண்டு செல்வதற்கும், வலிமையான, அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவை உருவாக்குவதற்கும் ஏதுவாக, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன், விரிவானதொரு சாதிவாரிக் கணக்கெடுப்பை இணைத்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய அரசு உடனடியாகத் தொடங்கிட வேண்டுமென்று வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

2021ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறாத நிலையில், வரவிருக்கக்கூடிய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதிவாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டுமென்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், மாநில அளவில் இதற்கான நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், இந்தியாவின் சட்டப்பூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு, முக்கியமான சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, சமூக நீதி, சமத்துவம் போன்றவற்றை நிலைநாட்டிட இயலும் என்றும், சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட இயலும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## கழகத்தின் அசைக்க முடியாத

# வைரத்தூண் கும்மிடிப்பூண்டி கி.வேணு!



கும்மிடிப்பூண்டி கி.வேணு!
கழகத்தின் அசைக்க முடியாத
வைரத்தூண்களில் ஒருவர்!
கழகத்தின் கட்டுக்கடங்காத போராளி!
வாழ்நாள் முழுவதும் வரிச்சிங்கமாகவே
வாழ்ந்துவிட்டவர்!
சிறைக்குஅஞ்சாதசிங்கம்!
தலைமைக்கு கீழ்ப்படிந்து நடப்பதில்
இவருக்கு நிகராக
தூண்களில் இன்னொருவரைச்சொல்வது
அரிதினும் அரிது!
செங்கல்பட்டு மாவட்டத்தில் கழகப்பணி ஆற்றும் போது
இவர் கால்படாத இடமில்லை!
கும்மிடிப்பூண்டி வேணு கூட இருப்பாரேயானால்,
எத்தனை ஆண்டு காலம் வேண்டுமானாலும்
சிறையில் இருக்கலாம் என்பார்கள்!
சிறையில் இருக்கிற அத்தனை பேருக்கும் அன்னையாக,
ஆறுதல் தருவதில் உற்றதோழனாக,
மற்றவர்களின் கோரிக்கைகளை
நிறைவேற்றி வைப்பதில்
ஆபத்பாந்தவனாக விளங்கியவர்!
அந்த கொள்கைக்குன்று
தன் வாழ்நாள் பணியை முடித்துக் கொண்டுவிட்டது
என்பதை
கேள்விப்பட்டவுடன் நான் அதிர்ச்சியும் துயரமும்
அடைந்தேன்!
அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும்
கழகத்தினருக்கும்
என் ஆழ்ந்தஇரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
எங்கள்நெஞ்சிருக்கும் வரை வேணு
உன் நினைவு எங்களோடு இருந்து கொண்டிருக்கும்!



**அமைச்சர் துரைமுருகன்**
கழகப் பொதுச் செயலாளர்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் காலமான திருவள்ளூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி. வேணு அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (21.10.2023) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், முன்னாள் அமைச்சர் சா.மு.நாசர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தாமதம் ஆகும் விசா:

## ஜனவரியில் கனடா செல்லும் மாணவர்கள் கவலை!

*டோரண்டோ, அக்.23-*

*மாணவர்களுக்கு விசா நடைமுறைகளில் உதவும் ஆலோசகர்கள் மற்றும் ஏஜெண்ட்கள், மாணவர்கள் தங்கள் விசாக்களை கையில் பெறுவதில் 60 நாட்கள் வரை தாமதம் ஏற்படும் என்று மதிப்பிடுகின்றனர்.*

*சண்டிகர், மும்பை மற்றும் பெங்களூருவில் இருந்து கனடா விசா மற்றும் தூதரக சேவைகளை திரும்பப் பெறுவது, அடுத்த ஆண்டு ஜனவரியில் பல்கலைக்கழகங்களில் சேரத் தயாராகும் மாணவர்களுக்குத் தடையை உருவாக்கியுள்ளது.*




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2023) கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, நீட் விலக்கை வலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கையெழுத்திட்டு ”நீட் விலக்கு நம் இலக்கு பெட்டியிலிட்டார்.

நீட்டை ஒழிப்போம் மாணவர்களை காப்போம்

## திருவாரூரில் மாபெரும் கையெழுத்து இயக்கம்!

*திருவாரூர், அக்23-*

*திருவாரூரில் “நீட்டை ஒழிப்போம் மாணவர்களை காப்போம்” எனும் மாணவர் நலன் காக்கும் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா. இளைய ராஜா, மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை.த. சோழராஜன், ஈரோடு மாநகர மகளிரணி அமைப்பாளர் அனிச்சம் கனிமொழி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

*திருவாரூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி மாணவரணி மற்றும் மருத்துவர் அணிகளின் சார்பில்,மாணவர்களின் மீது திணிக்கப்படும் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவரூரில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கையெழுத்து இயக்கத்தை துவங்கி வைத்தார்.*

*இந்த நிகழ்வில்மாநில மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளைய ராஜா, மாநில மாணவரணி துணை செயலாளர்மன்னை.த.சோழராஜன், ஈரோடு மாநகர மகளிரணி அமைப்பாளர் அனிச்சம் கனிமொழி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாணவ மாணவிகள், பொதுமக்கள் பெருந்திரளானோர் பங்கேற்று நீட் தேர்வு விலக்கு கோரும் படிவத்தில் கையெழுத்திட்டு குடியரசு தலைவருக்கு அனுப்ப ஒப்படைத்தனர்.*

## ‘நீட் நுழைவுத் தேர்வை’ ரத்து செய்ய வலியுறுத்தி

**தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில், “நீட் விலக்கு, நம் இலக்கு!” ‘மாபெரும் மக்கள் கையெழுத்து இயக்கத்தை’ மாநிலம் முழுவதும் மக்கள் இயக்கமாக கொண்டு செல்ல கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் 23.10.2023 அன்று மாலை, காணொலி காட்சி வாயிலாக**

# “தி.மு.க. அனைத்து அணிச் செயலாளர்கள் கூட்டம்”

## தலைமைக் கழகம் அறிவிப்பு

“நீட்” தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் - அமைச்சருமான உதயநிதிஸ்டாலின்முன்னெடுப்பில், தி.மு.க. இளைஞர்அணி, மாணவர்அணி, மருத்துவஅணி சார்பில் “நீட் விலக்கு, நம் இலக்கு” எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை 21.10.2023 அன்றுகாலைசென்னையில்நடைபெற்றநிகழ்ச்சியில்தமிழ்நாடு **முதலமைச்சர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின்** கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தை தொடக்கி வைத்து முதல் கையெழுத்திட்டார்.

நீட் தேர்வு விலக்கினை மக்கள் போராட்டமாக மாற்றும் வகையில், இக்கையெழுத்து இயக்கத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக, தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமம் முதல் பட்டணக்கரை கொண்டு சென்றிட ஏதுவாக, கழக அமைப்புச் செயலாளர் **ஆர்.எஸ்.பாரதி** தலைமையில், **வருகிற 23.10.2023 திங்கட்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில், “தி.மு.கழகத்தின் அனைத்து அணிச் செயலாளர்கள் கூட்டம்” காணொலி காட்சி வாயிலாக** நடைபெற உள்ளது.

இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில் கழக அனைத்து அணிச் செயலாளர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை-18.**
**நாள்: 21.10.2023.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**




ஒட்டுமொத்த தமிழ்நாடே நிராகரிக்கும் நீட் என்னும் அநீதியை ஒழிக்க, தி.மு.க. இளைஞர் அணி – மாணவர் அணி – மருத்துவ அணி முன்னெடுக்கும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தயாநிதி மாறன், கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், மருத்துவர் எழிலன், ஆர். டி.சேகர், எபினேசர், பிரபாகரராஜா மற்றும் மாவட்ட செயலாளர்கள் பொதுப் பள்ளிகளுக்கான மாநிலப் பொதுச் செயலாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு. ஊடகவியலாளர் தமிழ்கேள்வி செந்தில்வேல். திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி, நீட் எதிர்ப்பு போராளி அனிதாவின் சகோதரர் மணிரத்னம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் கௌதமன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யாவுக்கு

# டாக்டர் பட்டம் வழங்கும் கோப்பில் கையெழுத்திட மறுப்பதா?

## தமிழ்நாடு ஆளுநருக்கு பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!

*சென்னை, அக்.23-*

*சிறந்த சுதந்திரப் போராட்டத் தியாகியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முதுபெரும் தலைவருமான சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் கோப்பில் கையெழுத்திட மறுக்கும் ஆளுநருக்கு கடும் கண்டனம் தெரிவித்து மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு :*



*மிகச் சிறந்த சுதந்திரப் போராட்டத் தியாகியும், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கிட்டத்தட்ட 8 ஆண்டுகளை சிறையில் கழித்து, ஏழை எளிய மக்களுக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்த நூறு வயதைக் கடந்தவர் தோழர் சங்கரய்யா.*

*தமிழினத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர் மாணவத் தலைவர், சிறந்த பொதுவுடமை சிந்தனை யாளர், சிறந்த சட்டமன்ற உறுப்பினருமான என். சங்கரய்யா அவர்களின் ஒப்புயர்வற்ற சேவையை அங்கீகரிக்கும் விதமாக 18.08.2023 அன்று நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக் குழு கூட்டத்தில் அவருக்குக் கௌரவ முனைவர் பட்டம் (D.Litt) வழங்கப்படும் எனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, பின்னர் 20.09.2023 அன்று நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் கூட்டத்தில் எதிர்வரும் பட்டமளிப்பு விழாவில் கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ள்ளது.*

*கௌரவ முனைவர் பட்டயம் அல்லது சான்றிதழில் பல்கலைக்கழக வேந்தர் கையொப்பமிட வேண்டும் என்ற விதியின் அடிப்படையில் முனைவர் பட்டம் (D. Litt) வழங்க அனுமதி கோரும் கோப்பு பல்கலைக் கழகத்தால் ஆளுநர்வேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போது, அவர் அதில் கையொப்பமிட மறுத்துள்ளார்.*

*நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட உன்னத தலைவரை முனைவர் பட்ட கோப்பில் கையெழுத்திடாமல் தமிழக ஆளுநர் அவமதிப்பு செய்துள்ளார்.*

*ஆளுநர் தமது சித்தாந்த சிந்தனையை கடந்து மக்கள் பணி ஆற்ற வேண்டும்.02.11.2023 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ள பட்டமளிப்பு விழாவில், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு மற்றும் ஆட்சிப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி என்.சங்கரய்யாவுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

ககன்யான் டி விடி1 சோதனைக்கலன் வெற்றிகரமாக

# விண்ணில் ஏவப்பட்டமைக்காக இஸ்ரோவுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளப் பதிவு!

சென்னை, அக். 23-

ககன்யான் TVD1 சோதனைக் கலன் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டமைக்காக இஸ்ரோவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**ககன்யான் TVD1 சோதனைக்கலன் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டமைக்காக இஸ்ரோவுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவின் பயணத்தில் இந்தச் சாதனை குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். இதற்காக அர்ப்பணிப்புடன் கடுமையாக உழைத்த அனைத்து அறிவியலாளர்களுக்கும் எனது பாராட்டுகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# காவல் துறையினரின் தியாகங்களுக்கு வீர வணக்கங்கள்!

## காவலர் வீரவணக்க நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 23-

காவல்துறையினரின் தியாகங்களுக்கு காவலர் வீர வணக்க நாளில் எனது வீர வணக்கங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு, பொதுமக்களின் நிம்மதியான வாழ்க்கை, நாட்டின் வளர்ச்சிக்காகத் தம் உயிரையும் பணயம் வைத்து நம்மைப் பாதுகாக்கும் கடமையுணர்வு மிக்க காவல் துறையினரின் தியாகங்களுக்கு காவலர் வீர வணக்க நாளில் எனது வீர வணக்கங்கள்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# சாதியின் பெயரால் - மதத்தின் பெயரால் நாட்டை பிளவுபடுத்தும் பா.ஜ.க.!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

நான் உங்களின் ஃபாலோயர்! பார்க்காமலேயே நண்பர்களாக இருந்த கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் போலதான் நம்முடைய நட்பும் உறவும்! அந்த நட்புணர்வோடுதான் உங்களை நான் இன்றைக்கு பார்க்க வந்திருக்கிறேன்.

இந்தச் சந்திப்பில் நான் ஷேர் செய்யும் செய்திகளை நீங்கள் லைக் செய்வீர்கள் என்று நம்புகிறேன். லைக் செய்தால் மட்டும் போதாது, அதை நீங்கள் ரீஷேர் செய்ய வேண்டும்! செய்வீர்கள்தானே?

கரை வேட்டி கட்டியவர்கள் - கட்டாதவர்கள் என்று தி.மு.க.காரர்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் இரண்டு வகைப்படுத்துவார். சிலர் நேரடி அரசியலில் ஈடுபட மாட்டார்கள். ஆனால், வாய்ப்பு கிடைக்கும்போது எல்லாம், "தமிழினத்தின் மீட்சிக்காக உருவான இயக்கம் தி.மு.க.தான்!" என்று உரக்கச் சொல்லுவார்கள்!

கரை வேட்டி கட்டியவர்கள், சிங்கிள் டீ குடித்துவிட்டு வேலை பார்ப்பார்கள் என்றால், கரை வேட்டி கட்டாதவர்கள், எலக்ஷன் நேரத்தில், வாடகை சைக்கிள் எடுத்துக்கொண்டு உதயசூரியனுக்கு வாக்கு கேட்டு செல்வார்கள். இந்த பாரம்பரியத்தின் அப்டேட்டட் வெர்ஷன்தான் நீங்கள்!

### போர்வாள்! ஃபயர்வால்!

கட்சிக்கு அரணாக இருக்கும் கரை வேட்டி கட்டியவர்கள், போர்வாள்! இணையத்தில் இயக்கத்துக்காக உணர்வுப்பூர்வமாக போராடுகிற நீங்கள், ஃபயர்வால்! சிலசமயம் கழகத்தின் முடிவுகள் மற்றும் செயல்பாடுகளை விமர்சனம் செய்து எழுதுகிறீர்கள். உங்களின் விமர்சனத்தை ANTIவைரஸ் அலர்ட்டாகத்தான் நான் பார்க்கிறேன். கழகத்தை விமர்சிக்க மற்ற எல்லாரையும் விட, கழகத்தில் இருப்பவர்களுக்குத்தான் அதிக உரிமை இருக்கிறது. இந்த உரிமை நம்மால் நம்முடைய உறவால் வந்தது! அந்த உறவுக்கு என்றைக்கும் குந்தகம் வந்துவிடக் கூடாது என்று கடமையுணர்வோடு எச்சரிக்கையாக செயலாற்றுவதுதான் என்னுடைய நன்றியின் வெளிப்பாடாக இருக்கும்!

தலைவர் கலைஞர் ஒருமுறை சொன்னார், "நான் பக்குவப்பட்ட காலத்தில் பிறந்தவன் ஸ்டாலின்' என்று சொன்னார். தலைவர் கலைஞர் நிறைந்துவிட்ட பிறகு, கழகத்தின் தலைவராகவும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் இன்னும் பொறுமையாக நடந்து கொள்ள என்னை நானே பக்குவப்படுத்திக் கொண்டேன்.

### பாராட்டுகளைப் போல விமர்சனங்களையும் வரவேற்கிறேன்!

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் - வகுத்துத் தந்த பாதையில் கழகத்தையும் கழக அரசையும் நடத்துவதுதான் என்னுடைய முழுமுதல் இலக்கு! அதனால் பாராட்டுகளைப் போலவே, விமர்சனங்களையும் நான் வரவேற்கிறேன்.

அது இன்னும் என்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள உதவுகிறது. உங்களின் விமர்சனத்தில் தனிப்பட்ட நலனைவிட, பொதுநலன்தான் அதிகமாக இருக்கும். நல்ல நோக்கத்தோடு - பொது நம்பிக்கைக்காக நீங்கள் வைக்கும் ஆலோசனைகளை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அந்த எண்ணத்தோடுதான் உங்களோடு உரையாட விரும்புகிறேன்.

நம்முடைய இயக்கம் பேசிப் பேசி - எழுதி எழுதி - வளர்ந்த இயக்கம். சமுதாயத்தை உயர்த்தக் கூடிய இனமான எழுச்சியைத் தட்டியெழுப்பக் கூடிய - மொழி உணர்வை ஊட்டக் கூடிய வகையில் நம்டைய பேச்சுகளும் எழுத்துகளும் இருந்தன; இப்போதும் இருக்கிறது; அவ்வாறுதான் எப்போதும் இருக்கும்!

### எல்லாவிதமான ஊடகங்களிலும் வேலை பார்த்தவன்!

200க்கும் மேற்பட்ட பத்திரிகைகள், ஏராளமான நாடகக் குழுக்கள், இசைக்குழுக்கள் - பாடகர்கள் என்று சாமானியர்களின் மிகப்பெரிய பட்டாளமே இந்த இயக்கத்துக்காக உழைத்தது. அவ்வாறு, நானும் இயக்கத்தில் வந்து சேர்ந்து, நாடகங்களில் நடிக்கத் தொடங்கினேன். நாடகம் மட்டுமா, ஸ்கூல் பையனாக இருக்கும் போதே முரசொலிக்காக வேலை பார்த்தேன். கழகச் செய்திகளைத் தொகுத்து எழுதிக் கொடுப்பேன்.

நாளிதழ்களை ரயில் நிலையங்களுக்கு கொண்டு சென்று அனுப்பி வைப்பேன். 'இளைய சூரியன்' என்ற பத்திரிகையை சொர்ணம் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு அதைத் தொடர்ந்து நடத்தினேன். 'முரசே முழங்கு', 'திண்டுக்கல் தீர்ப்பு' போன்ற நாடகங்களில் ஊர் ஊராகச் சென்று நடித்திருக்கிறேன். 'ஒரே ரத்தம்' திரைப்படத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் 'நந்தக் குமார்' கேரக்டரில் நடித்தேன். மக்கள் ஆணையிட்டால் திரைப்படத்தில் ஒரு சிறப்பு ரோல். 'ஆற அமர கொஞ்சம் யோசித்துப் பாரு, நீ அடுத்து வரும் தலைமுறையை சிந்தித்துப் பாரு' என்று கலைஞர் எழுதிய பாடலை பாடி அதில் நடித்தேன். குறிஞ்சி மலர், சூர்யா போன்ற சீரியல்களில் நடித்திருக்கிறேன். இவ்வாறு, எல்லா விதமான ஊடகங்களிலும் வேலை பார்த்தவன் நான்.

இப்போது, ஃபேஸ்புக், யூடியூப், வாட்ஸ்அப், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் என்று சமூக ஊடகங்களிலும் கழகக் கொள்கைகளை எதிரொலித்துக் கொண்டு இருக்கிறேன்.

சமூக ஊடகங்களில் இருக்கும் அட்வான்டேஜ் என்ன என்றால், இதில், மக்களின் ரியாக்ஷனை உடனே தெரிந்து கொள்ளலாம். ஒரு கருத்தைச் சொன்னால் உடனே ஆதரித்தும், எதிர்த்தும், வாழ்த்தியும், திட்டியும். அவதூறு பரப்பியும் ஆயிரக்கணக்கான கமெண்ட்ஸ் வந்துவிடுகிறது. நம்முடைய கருத்துகள் நொடியில் கோடிக் கணக்கானவர்களுக்குச் சென்று சேர்ந்துவிடுகிறது.

### போஸ்டர் ஒட்டியவன் நான்!

'முரசே முழங்கு' நாடகத்தின் வெற்றி விழா நிகழ்ச்சிக்கு ரோடு ரோடாக ரிக்ஷாவில் சென்று போஸ்டர் ஒட்டியவன் நான். ஒருமுறை போஸ்டர் ஒட்டிவிட்டு, அதிகாலையில் நான்கு மணிக்குத்தான் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அப்போது ஸ்டெல்லா மேரிஸ் காலேஜில், "ஸ்டிக் நோ பில்ஸ் என்று போடப்பட்டிருந்த சுவரில் எதற்கு போஸ்டர் ஒட்டினீர்கள்?" என்று என் மேல் கேஸ் போட்டுவிட்டார்கள். அப்போது நான் முதலமைச்சரின் மகன். எதற்குச் சொல்கிறேன் என்றால், அப்போதே அப்படி இருந்தது நம்முடைய ஆட்சி. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்பத்தான் இப்போதும் நடக்கும். வேறு வழியில்லை.

> **அவர்களுக்கு இப்போது ஒரே வேலைதான்! துர்கா ஸ்டாலின் எந்தக் கோயிலுக்குப் போகிறார் என்று பார்க்கிறார்கள். அந்த போட்டோவை எடுத்துப் போட்டு, "பாத்தீர்களா, கோயிலுக்குச் செல்கிறார்" எனப் பரப்புகிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாக் கோயிலுக்கும்தான் துர்கா செல்கிறார். அது அவரது விருப்பம். அதை நான் தடுக்கவில்லை. நாங்கள் ஆரிய ஆதிக்கத்துக்குத்தான் எதிரிகளே தவிர ஆன்மீகத்துக்கு எதிரிகள் அல்ல. கோயிலும் - பக்தியும் அவரவர் உரிமை - விருப்பம்! ஏராளமான கோயில் நுழைவுப் போராட்டங்களை நடத்தி வெகு மக்களுடைய வழிபாட்டு உரிமையை வாங்கிக் கொடுத்தது திராவிட இயக்கம்தான். தலைவர் கலைஞரின் பராசக்தி வசனம்தான் அவர்களுக்குப் பதில்: "கோயில் கூடாது என்றல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது!"**

## 1000 கோவில்களுக்கு குட முழுக்கு நடத்திய திராவிட மாடல் ஆட்சி!

ஆனால், இன்றைக்கு அந்த நிலையெல்லாம் மாறிவிட்டது. வாட்ஸ்அப்இல் ஒரு Card போட்டால் போதும்! எவ்வளவோ பெரிய வளர்ச்சி இது. இந்த வசதியையும் வாய்ப்பையும் முறையாக - சரியாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். திராவிட இயக்கம் என்பது தமிழினத்தைத் தலைநிமிர வைக்க பிறந்த இயக்கம்! யார் தலையையும் எடுக்கப் பிறந்த இயக்கமல்ல! சீவுவேன்... சீவுவேன் என்று சொல்கிறார்களே இப்போது...

சமூக வலைத்தளங்களில் நம் நோக்கத்தை நாம் முறையாகப் பயன்படுத்துவோம்! அந்த வாய்ப்பை நேரான வழியில் பயன்படுத்துவோம்! சமூக வலைத்தளங்கள் ஒருவரை ஒரே நாளில் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லும். ஒருவர் பல காலம் கட்டமைத்த பிம்பத்தை சில நொடிகளில் உடைத்துவிடும். என்னைப் பொறுத்தவரை நெகட்டிவ் பிரச்சாரத்தின் மூலம் எதிரியை வீழ்த்துவதை விட, பாசிட்டிவ் பிரச்சாரத்தின் மூலம் நம்மை வளர்த்துக்கொள்வது தான் சரியானது!

### நமக்கான பாடங்கள்!

தன்னை யாரெல்லாம் எதிர்த்தார்கள் என்று தந்தை பெரியாரே பட்டியல் போட்டு சொல்லி இருக்கிறார். அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த தலைவர்கள் இயக்கங்கள் - பத்திரிக்கைகள் என்று எல்லோராலும் எதிர்க்கப்பட்டவர் தந்தை பெரியார். அவர்களின் பெயரெல்லாம் பட்டியல் போட்டால் அதில் பலரை உங்களுக்கு யாரென்றே தெரியாது. ஆனால், பெரியார் இன்றைக்கும் வாழ்கிறார்.

"வாழ்க வசவாளர்கள்!" என்று சொல்லி தன்னுடைய எதிரிகளை அன்பால் வீழ்த்தியவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

"கூட்டில் இருக்கும் புழுக்களைப் போல் கொட்டப்பட்டு கொட்டப்பட்டு வளர்ந்தவன் நான்" - "நான் எனது எதிரிகளுக்கு மட்டுமே பதில் சொல்லிக் கொண்டிருந்தால் நான் வளர்ந்திருக்கவே முடியாது" "யாருக்கெல்லாம் நன்மை செய்தேனோ, அவர்களால் அதிகமாக தாக்கப்பட்டவன் நான்" என்று நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார். இதெல்லாம்தான் நமக்கான பாடங்கள்!

### கழகத்தினர் முன்தள வீரர்கள் நீங்கள்!

அதற்காக யாருக்கும் பதில் சொல்லக் கூடாது; எல்லா விமர்சனங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை! குறை சொல்கிறவர்கள் அவதூறு பரப்புகிற வர்கள் பழி சுமத்துகிறவர்கள் எல்லாக் காலத்திலும்தான் இருந்தார்கள். மருந்து கண்டுபிடித்து விட்டால் நோய்க் கிருமிகள் ஒழிந்துவிடுமா என்ன? அதுமாதிரிதான். சமூகத்தைப் பின்னோக்கி இழுத்துக்கொண்டு இருந்த நோய்க் கிருமிகளை ஒழிக்க உருவான மருந்துதான் திராவிட இயக்கம்! அதனால், அந்த நோய்க் கிருமிகளை எதிர்த்து நாம்தான் போராடியாக வேண்டும். இன்றைக்கு சோஷியல் மீடியாவும் சில மீடியாக்களும் அவர்கள் கண்ட்ரோலில் இருக்கிறது. அதனால், பொய் சொல்லவும் அவதூறு செய்யவும் அவர்கள் தயங்குவதில்லை. இதற்குச் சரியான பதிலை நாம் சொல்ல வேண்டும். ராணுவத்தின் முன்கள வீரர்கள் மாதிரி, கழகத்தின் முன்தள வீரர்கள் நீங்கள்!

களமும் தளமும் கைகோர்த்தால்தான் வெற்றி! களத்தில் நிற்கும் வேட்பாளருக்கு தளத்தில் களமாடி வெற்றிக்கு காரணமாக இருக்கிறவர்கள் நீங்கள்! இங்கு வந்திருக்கும் உங்கள் எல்லோரின் ஃபாலோயர்ஸ் எண்ணிக்கை 99 இலட்சத்து 62 ஆயிரத்து 618. ஏறத்தாழ ஒரு கோடி ஃபாலோயர்ஸ் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் உங்களின் தன்னார்வத்தால், தன்னலமற்ற செயல்பாட்டால் கழகத்துக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

### தி.மு. கழகத்திற்கு நீங்கள் மிகப்பெரிய பலம்!

'தொண்டர்களின் உழைப்பு கழகத்திற்கு ரத்தநாளம்' என்று தலைவர் கலைஞர் சொல்வார். அதனால்தான், தலைமைக் கழகத்தின் சார்பிலோ - நிர்வாகிகளின் அறிக்கையோ வருவதற்கு முன்பே, உங்களிடம் இருந்து ரியாக்ஷன் வந்துவிடுகிறது. நாங்கள் சொல்ல முடியாததை சொல்லத் தயங்குவதைக் கூட உங்களால் சொல்ல முடியும்! அந்த வகையில் நீங்கள் தி.மு.க.விற்கு மிகப்பெரிய பலம்! ஏராளமான அரசியல் எதிரிகளை வெற்றிகண்ட வரலாறு நம்முடையது. 'கொம்பாதி கொம்பர்கள்' என்று சொல்லப்பட்டவர்களை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறோம்.

இந்த இயக்கத்தை அழிச்சிடலாம் என்று நினைத்தவர்களின் எண்ணம்தான் அழிந்து போயிருக்கிறதே தவிர, தி.மு.க.வை அவர்களால் கற்பனையில் கூட அழிக்க முடியாது. "திராவிட இயக்கத்தைக் குழி தோண்டிப் புதைப்பேன் - வேரோடும் வேரடி மண்ணோடும் புதைப்பேன்" என்று சொன்னது யார் என்று கேட்டால், யாருக்கும் தெரியாது. "திராவிட இயக்கத்தை ஒழிப்பதைத் தவிர வேறு வேலை இல்லை" என்று சொன்ன பல பேர், கடைசியில் இங்குதான் அடைக்கலமானார்கள். இதுதான் வரலாறு!

> **சமூக வலைத்தளங்களில் நம் நோக்கத்தை நாம் முறையாகப் பயன்படுத்துவோம்! அந்த வாய்ப்பை நேரான வழியில் பயன்படுத்துவோம்! சமூக வலைத்தளங்கள் ஒருவரை ஒரே நாளில் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லும். ஒருவர் பல காலம் கட்டமைத்த பிம்பத்தை சில நொடிகளில் உடைத்துவிடும். என்னைப் பொறுத்தவரை நெகட்டிவ் பிரச்சாரத்தின் மூலம் எதிரியை வீழ்த்துவதை விட, பாசிட்டிவ் பிரச்சாரத்தின் மூலம் நம்மை வளர்த்துக்கொள்வதுதான் சரியானது!**

மூதறிஞர் இராஜாஜியும், சிலம்புச்செல்வர் ம.பொ.சி.யும் இந்த இயக்கத்தைத் தொடக்க காலத்தில் எதிர்த்தார்கள். ஆனால், 1967 தேர்தலில் தி.மு.க.வை ஆதரித்தார் இராஜாஜி. உதயசூரியனிலேயே போட்டியிட்டார் ம.பொ.சி. அந்தத் தலைவர்களுக்கு எல்லாம் மாற்றுக் கொள்கை இருந்தது.

### ஒட்டுமொத்த மனித குலத்துக்கே எதிரானது!

ஆனால் இன்றைக்கு, பா.ஜ.க - அ.தி.மு.க. போன்ற வெகுஜன விரோதிகளிடம் நாம் மோதிக்கொண்டு இருக்கிறோம். பாசிசத்துக்கு எதிராக நேரடியாக மோதிக்கொண்டு இருக்கிறோம். எப்படியாவது மக்களைச் சாதியின் பெயரால் மதங்களின் பெயரால் பிளவுபடுத்தி நாட்டை நாசம் செய்ய நினைக்கும் ஒரு கூட்டத்துக்கு எதிராக நாம் மோதிக்கொண்டு இருக்கிறோம். பா.ஜ.க.வின் பாசிசத்தன்மை ஏதோ நமக்கோ நம் இயக்கத்துக்கோ - நம்மோட கொள்கைகளுக்கோ - நம்முடைய தமிழ்நாட்டுக்கோ மட்டும் எதிரானது அல்ல! இந்தியாவுக்கே எதிரானது. ஒட்டுமொத்த மனித குலத்துக்கே எதிரானது.

### 'உள்ளே வெளியே' ஆட்டம் ஆடும் அ.தி.மு.க.!

இப்படிப்பட்ட பாசிசவாதிகள் ஒருபக்கம் இவர்களுடைய பாதம் தாங்கிகளாக இருந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்த அடிமை அ.தி.மு.க மறுபக்கம். கொள்கை என்றால், "கிலோ என்ன விலை?" என்று கேட்கும் கொள்கையற்ற கூட்டம்தான் அ.தி.முக! இனிமேலும், பா.ஜ.க.வுடன் இருந்தால் தமிழ்நாட்டு மக்களால் மொத்தமாகப் புறக்கணிக்கப்படு வோம் என்று பயந்து, "உள்ளே வெளியே" ஆட்டம் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் பா.ஜ.க.வும் அண்ணா பெயரில் கட்சி நடத்தி அதை பா.ஜ.க.விடம் அடகு வைத்த அ.தி.மு.க.வும் வேறு வேறு அல்ல! நாணயமில்லாத நாணயத்தின் இரு பக்கங்கள்தான் இருவரும்!

## எதிரிகளின் அவதூறுகளுக்கு தக்க பதிலடி கொடுங்கள்!

**பா.ஜ.க.வைப் பொறுத்தவரை, அரசியல் எதிரிகள் மேல் மட்டுமல்ல, ஊடகவியலாளர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், மானுடப் பற்றுமிக்கவர்கள் என்று எல்லோர் மீதும், அதிகார அத்துமீறல்கள், மிரட்டல்கள், அடக்குமுறை ஏவல்கள் செய்பவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சோஷியல் வைரஸைத்தான் நாம் துணிவோடு எதிர்த்து நிற்கிறோம். மிசா... தடா... பொடா... எல்லாம் பார்த்தாயிற்று. மிரட்டல்... உருட்டல்... இதெல்லாம் நம்மை ஒன்றும் செய்யாதென்பதால்தான், பொய் மூட்டைகளையும் அவதூறுகளையும் கட்டவிழ்க்கிறார்கள்! ஹிட்லருக்காவது ஒரே ஒரு கோயபல்ஸ்தான் இருந்தார். ஆனால், கோயபல்ஸ் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கட்சி ஆரம்பித்தால் எவ்வாறு இருக்குமோ அப்படித்தான் அந்தக் கூட்டம் இருக்கிறது! போகிறபோக்கில் யார் மீது வேண்டுமானாலும் அவதூறு பரப்பலாம்... என்ன பொய் வேண்டுமானாலும் சொல்லலாம்... எதற்கும் ஆதாரம் வேண்டாம்! பொய் பேசுகிறோமே என்கிற கூச்சம் வேண்டாம்! அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் வாட்ஸ்அப் யுனிவர்சிட்டிதான்.**

**அதில் என்ன வதந்திகளை வேண்டுமானாலும் பரப்பலாம். அதை நம்புவதற்கு ஆட்டு மந்தைக் கூட்டம் தயாராக இருக்கிறதென அடித்து விடு கிறார்கள்... தம் பிடித்து அவர்கள் ஊதுகிற பொய் பலூனை, உண்மை என்கிற ஊசியை வைத்து எளிதாக நாம உடைத்து விடுகிறோமே என்ற எரிச்சல் அவர்களுக்கு... பொய்களுக்குப் பொய்கள் என்றைக்குமே பதிலாகாது! போலியான பெருமைகள் நமக்குத் தேவையில்லை! உண்மையான உழைப்புக்கு அங்கீகாரம் கிடைத்தால் போதும்! நமது செய்திகள் உண்மை யானவையாக இருக்க வேண்டுமே தவிர, பா.ஜ.க.வினரைப் போல போலியாக இருக்கக் கூடாது.**

### கோயிலும் - பக்தியும் அவரவர் உரிமை!

அவர்களுக்கு இப்போது ஒரே வேலைதான்! துர்கா ஸ்டாலின் எந்தக் கோயிலுக்குப் போகிறார் என்று பார்க்கிறார்கள். அந்த போட்டோவை எடுத்துப் போட்டு, "பார்த்தீர்களா, கோயிலுக்குச் செல்கிறார்" எனப் பரப்புகிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாக் கோயிலுக்கும்தான் துர்கா செல்கிறார். அது அவரது விருப்பம். அதை நான் தடுக்கவில்லை. நாங்கள் ஆரிய ஆதிக்கத்துக்குத்தான் எதிரிகளே தவிர ஆன்மீகத்துக்கு எதிரிகள் அல்ல. கோயிலும் - பக்தியும் அவரவர் உரிமை - விருப்பம்! ஏராளமான கோயில் நுழைவுப் போராட்டங்களை நடத்தி வெகு மக்களுடைய வழிபாட்டு உரிமையை வாங்கிக் கொடுத்தது திராவிட இயக்கம்தான். தலைவர் கலைஞரின் பராசக்தி வசனம்தான் அவர்களுக்குப் பதில்: "கோயில் கூடாது என்றல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது!"

கோயிலையும் பக்தியையும் பா.ஜ.க. தன்னுடைய அரசியலுக்கு சாதகமாக மாற்ற நினைக்கிறது. ஆன்மீகத்தையும் - அரசியலையும் மிகச்சரியாக பகுத்துப் பார்க்கத் தெரிந்த பகுத்தறிவுவாதிகள்தான் தமிழ்நாட்டு மக்கள். "இந்த கோயில இடிச்சிட்டாங்க அந்தக் கோயில இடிச்சிட்டாங்க" என வாட்ஸ்அப்பில் பூகம்பப் படங்களைப் போட்டு வதந்தி பரப்புகிறார்கள். ஆனால், உண்மை என்ன? 1000 கோயில்களுக்குக் குடமுழுக்கு விழா நடத்திய ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி. 5000 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துக்களை மீட்ட ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி. யார் யாரிடம் இருந்து, எங்கே எங்கே இருந்து இந்தச் சொத்தெல்லாம் மீட்கப்பட்டது என அறநிலையத்துறை புத்தகமாகவே அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இதைச் சொல்வதெல்லாம்தான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

லைட் எரிந்தால் திருடனுக்குத்தான் பிடிக்காது! கோயிலை முறையாகப் பராமரித்தால் மதவெறியைத் தூண்டிக் குளிர்காய நினைக்கும் கும்பலுக்குப் பிடிக்காது. அதனால் உண்மைகளைத் தொடர்ந்து மக்களுக்கு எடுத்துச் சொல்வோம்! நம்முடைய கருத்துகளைத் தமிழைத் தாண்டி இந்தியா முழுவதும் உள்ள மற்ற மொழி பேசும் சகோதர - சகோதரிகளிடம் எடுத்துச் செல்வோம். அப்படி நம்முடைய கருத்துகளை மற்ற மொழிகளில் கொண்டுபோகத்தான் Speaking for India பாட்காஸ்ட் தொடரைத் தொடங்கியிருக்கிறேன். இதுவரைக்கும், 2 எபிசோட் வந்திருக்கிறது இதை மொத்தம் 20 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பார்த்திருக்கிறார்கள். இது எத்தனை மாநாடுகளுக்கு சமம் என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும்!

இப்படி, நம் கருத்துகள் எல்லாத் தரப்பினரையும் சென்றடைய வேண்டும். இன்ஸ்டாகிராம், யூடியூப் என இளைய தலைமுறையினரை ஈர்க்கக்கூடிய சமூக வலைத் தளங்களில் அதிக கவனம் செலுத்துங்கள். இந்த சந்திப்பை ஏற்பாடு செய்த ஐ.டி. விங் செயலாளர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும், அவருக்குத் துணையாக இருக்கும் மற்றவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்! இந்த நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டிருக்கும், 'கலைஞர் 100' புத்தகத்தைப் படித்து, எதிரிகளின் அவதூறுகளுக்கு உங்கள் பாணியில் பதிலடி கொடுங்கள். எதிரிகள் நம்மை இழிவு செய்தாலும் கண்ணியமாகப் பதிலடி கொடுப்போம். நாற்பதும் நமதே. நாடும் நமதே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ‘நீட்’ விலக்கை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம்!



நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது. இதன் தொடர்ச்சியாக ஒசூரில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்து இட்டனர் இந்நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், மாநகர மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன் மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், துணை மேயர் ஆனந்தையா, அவைத் தலைவர் யுவராஜ், புஷ்பா சர்வேஷ், சுகுமாரன், அருணா பூசன் குமார், இளைஞர் அணி அமைப்பாளர் சுமன், மாணவர் அணி அமைப்பாளர் கண்ணன், மருத்துவர் அணி அமைப்பாளர் பூபேஷ் கார்த்திக் உள்ளிட்ட ஐநூறுக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.




கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க “நீட் விலக்கு நம் இலக்கு” எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தைத் திருச்சி தெற்கு மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து தீபக், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முத்து வெங்கடேஷ், மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் தமிழரசன், மாநகர மாணவரணி அமைப்பாளர் அசாருதீன் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணியை சார்ந்த கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி ஏற்பாட்டில் தாராபுரம் சிவரஞ்சினி மஹாலில் அ.தி.மு.க. அரசின் உதவியுடன் நீட் தேர்வைத்திணித்து மருத்துவர் ஆக வேண்டும் என்ற நம் மாணவர்களின் கனவைச் சிதைக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கத்தை மாவட்டக் கழக செயலாளர், இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் வரவேற்புரையில் நகர கழக செயலாளர் சு.முருகானந்தம், மாணவர் அணி ஜி.குகன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் கழக இலக்கிய அணி புரவலர் செந்தலை ந.கவுதமன், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் விலக்கு, நம் இலக்கு என்ற மக்கள் இயக்கத்தை கழகத்தலைவர், தமழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் முன்னிலையில் தொடங்கி வைத்ததையடுத்து நாகை மாவட்டம் புதிய பேருந்து நிலையத்தில் மாணவ, மாணவிகளிடம் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தொடங்கி வைத்தார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர்கள் ஜெக.வீரப்பாண்டியன், போஸ், வி.ஜெயபிரகாஷ், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து மற்றும் ஒன்றிய, நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி நாராயணசாமி திருமண மண்டபத்தில், தி.மு.க. இளைஞர் அணி ,மாணவர் அணி,மருத்துவ அணிகள் இணைத்து நடத்தும் நீட் தேர்வை எதிர்த்து 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகள் என்ற இலக்கை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் கொள்கை பரப்பு துணை செயலாளர் கரூர் முரளி ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாநில,மாவட்ட,ஒன்றிய பேரூர் கழகத்தினர்,அணிகளின் அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள்,கல்லூரி மாணவர்கள்,பள்ளி மாணவர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



உடல்நலக் குறைவால் மறைவெய்திய திருவள்ளூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் கும்முடிபூண்டி கி.வேணு உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் அமைச்சர் ஆர்.காந்தி, தயாநிதிமாறன் எம்.பி., முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# ஈரோடு தெற்கு மாவட்டத்தில் மருத்துவ முகாம்கள்!

## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிவிப்பு!

ஈரோடு, அக். 23-

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர பகுதிகள், ஒன்றியங்களில் நந்தா மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவ மனை சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்கள் கீழ் கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது. 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை பெரிய சேமூர் பகுதியிலும், 5.11.2023 ஞாயிற்றுக்கிழமை கோட்டை பகுதியிலும், 19.11.2023 சூரம்பட்டி பகுதியிலும், 23.11.2023 ஞாயிற்றுக்கிழமை பெரியார் நகர் பகுதியிலும், 3.12.2023 ஞாயிற்றுக்கிழமை கொல்லம்பாளையம் பகுதியிலும், 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை கருங்கல்பாளையம் பகுதியிலும் ஆகிய 8 பகுதிகளில் நடைபெறும் மருத்துவ முகாம்கள் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையிலும் பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், வி.செல்வராஜ் , பொ.ராமசந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன், அக்னி டி.சந்திரசேகர், க.லட்சுமண குமார், குறிஞ்சி என்.தண்டபாணி ஆகிய பகுதி செயலாளர்கள் முன்னிலையிலும் 17.12.223 ஞாயிற்றுக்கிழமை கொடுமுடி வடக்கு ஒன்றியத்திலும், 24.12.2023 ஞாயிற்றுக்கிழமை கொடுமுடி மேற்கு ஒன்றியத்திலும், 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியத்திலும், 7.1.2024 ஞாயிற்றுக்கிழமை மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியத்திலும், 14.1.2024 ஞாயிற்றுக்கிழமை மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியத்திலும், 22.1.2024 ஞாயிற்றுக்கிழமை சென்னிமலை ஒன்றியத்திலும், 28.1.2024 ஞாயிற்றுக்கிழமை ஈரோடு ஒன்றியத்திலும் , 4.2.2024 ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை தெற்கு ஒன்றியத்திலும், 11.2.2024 ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை கிழக்கு ஒன்றியத்திலும், 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை வடக்கு ஒன்றியத்திலும், 25.2.2024 ஞாயிற்றுக்கிழமை ஊத்துக்குளி தெற்கு ஒன்றியத்திலும், 3.3.2024 ஞாயிற்றுக்கிழமை ஊத்துக்குளி வடக்கு ஒன்றியத்திலும், 10.3.2024 ஞாயிற்றுக்கிழமை ஊத்துக்குளி மத்திய ஒன்றியத்திலும் ஒன்றிய கழக செயலாளர்கள் மு.சின்னசாமி, ப.நடராஜன் வி.கதிர்வேல், சு.குணசேகரன், ஆர்.விஜயகுமார், பி.செங்கோட்டையன் தோப்பு சதாசிவம், கே.பி.சாமி, சி.பெரியசாமி, பி.சின்னசாமி பி.பி.ஈஸ்வரமூர்த்தி, எஸ்.சுப்பிரமணியம், வி.ராஜா ஆகிய ஒன்றிய செயலாளர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்கண்ட நிகழ்ச்சிகளில் அந்தந்த இடங்களில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், பொது மக்கள் மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்ட

# முத்தூர் காங்கேயம் கூட்டுக்குடிநீர் திட்டப்பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருப்பூர், அக். 23 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் 21.10.2023 சனிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்ட முத்தூர் காங்கேயம் கூட்டுக்குடிநீர் திட்டத்திலுள்ள சுத்திகரிப்பு மற்றும் நீருந்து நிலையங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது என்றார்.

தொடர்ந்து கொடுமுடி வட்டம், இச்சிப்பாளையத்தில் முத்தூர்காங்கயம் கூட்டுக் குடிநீர் திட்டம் நீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம், மேட்டுக்கடை, வாலிப்பனங்காடு, பச்சாபாளையம் ஆகிய நீருந்து நிலையங்களையும், காங்கேயம் அய்யச்சாமி காலணியில் காங்கேயம் ஒன்றியத்தை சார்ந்த குடியிருப்புகளுக்கான நீர் விஸ்தரிப்பு நிலைத்தையும் அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் காங்கேயம் ஆய்வு மாளிகையில் முத்தூர்காங்கயம் கூட்டுக் குடிநீர் திட்டம் தொடர்பாக சமந்தப்பட்ட அரசு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தலைமைப் பொறியாளர் செல்லமுத்து, மேற்பார்வை பொறியாளர் மதியழகன், நிர்வாகப் பொறியாளர் (முத்தூர் காங்கேயம் கூட்டுக்குடிநீர் திட்டம்) கண்ணன், உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, உதவிப் பொறியாளர் ரவிச்சந்திரன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆசிரியர் வெ.கோவிந்தன்
### அக்டோபர் 23 (2021)



ஆசிரியராயப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு கலைக்கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 'சட்டமன்ற நாயகர் கலைஞர்' இரண்டாம் நாள் கருத்தரங்கம் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சாவூர் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சித்தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றியம் கீரணிப்பட்டியில்

# புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டட, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை,அக். 23-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், துரையூர் ஊராட்சி, கீரணிப்பட்டியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடத்தினையும் மற்றும் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (20.10.2023) அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மேற்கொண்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுமைப்பெண் திட்டம், மகளிருக்கு இலவச பேருந்து பயணத் திட்டம், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கீரணிப்பட்டியில் புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடம் மற்றும் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறந்து வைக்கப் பட்டது.

அதன்படி கீரணிப்பட்டியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.23.57 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இந்த ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடத்திற்கு சென்று வருவதன் மூலம் நிறைவடையும்.

அதனைத்தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு, வீடுகளுக்கு தேவையான குடிநீர் நிறைவாக வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த குடிநீரினை இப்பகுதி பொதுமக்கள் வீணாக்காமல், சிக்கனமாக பயன்படுத்திட வேண்டும். மேலும் இதுபோன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் துரையூர் ஊராட்சியில், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.44 லட்சம் மதிப்பீட்டில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளும் மற்றும் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் 2.7 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைவாக, நல்ல முறையில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டப் பணிகளை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணராஜா, சிங்காரவேலன், ஊராட்சிமன்றத் தலைவர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கம்

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - மாவட்ட செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், பங்கேற்பு

நாமக்கல், அக். 23-

தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவர் அணி மற்றும் மாணவர் அணி சார்பாக நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை விளையாட்டு மற்றும் இளைஞர் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் துவங்கி வைததார்.

நாமக்கல் மேற்கு திருச்செங்கோட்டில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற கோஷத்தை முன்னிறுத்தி நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் தலைமையில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தனர்.

நீட் விலக்கு நம் இலக்கு என்ற கோஷத்தை முன்னிறுத்தி நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை திமுக முன்னெடுத்து வருகிறது. அதன்படி தமிழகத்தில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து பெறும் விதமாக கையெழுத்து இயக்கத்தை சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்த இயக்கம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்செங்கோட்டில் உள்ள திருமண மண்டபத்தில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இந்த கையெழுத்து இயக்கத்தை திமுக இளைஞரணி, மருத்துவர் அணி, மாணவர் அணியினர் நடத்தினர். 500க்கும் மேற்பட்டோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கையெழுத்திட்டு அட்டைகளை உயர்த்திப் பிடித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர், ஒவ்வொரு பகுதியிலும் பொதுமக்களிடம் நீட் தேர்வின் விபரீதங்கள் குறித்து எடுத்துக் கூறி கையெழுத்து பெற்று அனுப்ப வேண்டும் என்று நிர்வாகிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருச்செங்கோட்டில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டு நீட் தேர்வுக்கு எதிராக தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர், இந்த கையெழுத்து பெற்ற அட்டைகள் வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள இளைஞர் அணியின் இரண்டாவது மாநாட்டில் முதல்வரிடம் ஒப்படைக்கப்படும். அவர் குடியரசு தலைவருக்கு அந்த கையெழுத்துக்களை அனுப்பி வைத்து தமிழகத்தின் கண்டனத்தை பதிவு செய்வார் என்று அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் தா.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜி தங்கவேல், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள்,

ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி மருத்துவர் அணி மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் 500 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வெள்ளக்கோவில் நகரம், உப்புபாளையத்தில் சுமை தூக்குவோர் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் புதிய கட்டிடம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தன், அவைத்தலைவர் சி.குமரவேல், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர்எம்.எஸ்.மோகன செல்வம் உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சுமை தூக்குவோர் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தாராபுரத்தில் ரூ.24 கோடி மதிப்பீட்டில்

# புதிய அரசு தலைமை மருத்துவமனை கட்டடம் கட்டும் பணி!

## அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேரில் ஆய்வு !

திருப்பூர், அக்.23-

தாராபுரத்தில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய அரசு தலைமை மருத்துவமனை கட்டிடத்தை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, அதை பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அந்த வகையில் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு தலைமை மருத்துவமனையின் பின்பகுதியில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ உபகரணங்கள் அடங்கிய விரிவு படுத்தப்பட்ட புதிய ஆறு தளங்களைக் கொண்ட கட்டிடம் 62.268 சதுர அடி பரப்பளவில் மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. இங்கு அதிநவீன மருத்துவக் கருவிகள், கதிர் இயக்க அறை, சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ ஸ்கேன், அறுவை சிகிச்சை அரங்குகள் உட்பட உடனடி மருத்துவ சிகிச்சைக்கான உபகரணங்கள் அனைத்தும் நிறுவப்பட உள்ளன. புதிய கட்டிடத்தில் 70 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஆய்வின்போது பொதுப் பணித் துறை அதிகாரிகள், அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் சக்திராஜ், தாராபுரம் நகர கழக செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் சு.முருகானந்தம், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ். தனசேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க.செல்வராஜ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் கமலக்கண்ணன், நகர துணைச் செயலாளர் தவச்செல்வன், பைக் செந்தில்குமார், நகர் மன்ற உறுப்பினர் புனிதா சக்திவேல், ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சிவசங்கர், நகர்மன்ற முன்னாள் உறுப்பினர்கள் தனசேகர், ஜான் பிரபாகர் உட்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மேல்மலையனூர் ஒன்றியம்

# வளத்தியில் சமுதாய வளைகாப்பு விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சீர்வரிசை பொருட்களை வழங்கினார்

செஞ்சி, அக்.23-

விழுப்புரம் மாவட்டம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேல்மலையனூர் வட்டாரத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா வளத்தியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் டயனா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு வளைகாப்பு விழாவை தொடங்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களைவழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் விஜய லட்சுமி முருகன், சாந்தி சுப்ரமணியன், செல்வி ராம சரவணன், குலத்துங்கன், சரவணகுமார், வெங்கடேசன், விஜயலட்சுமி ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். சித்ரா நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.சி. சந்திரன்

### அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

"முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.ஆர். கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.





திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வடக்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் கழகத்தினர் – பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் உற்சாக வரவேற்பு அளித்தபோது எடுத்த படம்.

ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் தலைமை! வேளாங்கண்ணி பேரூராட்சியில்

# ரூ.48 லட்சத்தில் பள்ளி மற்றும் நியாய விலை கட்டிடம்!

## என்.கௌதமன், ஜானிடாம்வர்கீஸ், நாகைமாலி திறந்து வைத்தனர்!

நாகை. அக்.23-

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து வேளாங்கண்ணி பேரூராட்சியில் 1984ம் ஆண்டு தொடங்கப்பட்டு 39ஆண்டுகள் சிறப்பாக இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.33.40 லட்சம் மதிப்பிலான புதிதாக கட்டப்பட்டுள்ள மூன்று வகுப்பறை கட்டங்கள், ரூ.15 லட்சம் மதிப்பில் வேளாங்கண்ணி கடற்கரையில் மீனவ கிராம மக்களுக்காக ரூ.15 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலை கடை கட்டிடட திறப்பு விழா நடைபெற்றது.

ஒன்றிய ஆத்மாகுழு தலைவரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன் தலைமை தாங்கினார். வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா, கீழையூர் ஒன்றியக் குழுத் தலைவர் செல்வராணி ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆத்தமா குழு உறுப்பினரும், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ் வரவேற்றார்.

புதிய கட்டிடங்களை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாக்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மாவட்ட துணை ஆட்சிர் ரஞ்சித்சிங், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மாவட்டப் பிரதிநிதி மு.ப. ஞானசேகரன், கூட்டுறவு சங்க மண்டல துணைப் பதிவாளர் பன்னீர்செல்வம், கூட்டுறவு சங்க மண்டல துணைப் பதிவாளர் பன்னீர்செல்வம், வேளாங்கண்ணி பேரூர் கழக நிர்வாகிகள் கந்தையன், மரிய சூசைநிக்சன், சார்லஸ். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வெற்றிவேல், ஜெயனட்அலக்ஸ், சுமதி பாண்டியன், சித்திரா, தையல்நாயகி, வின்சியா, சத்தியாவிரமணி, சசிரேகா, கவிதா ஒன்றிய பொறியாளர் அணி ஒருங்கணிப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட ஏரானமாவர்கள் கலந்து கொண்டனர்.







கழக இளைஞர் அணிச் செயலாளரும் – அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் தலைமையேற்று, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கையெழுத்திட்டு 'நீட் விலக்கு நம் இலக்கு' பெட்டியிலிட்டார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; திராவிட மாடல் ஆட்சியை திராவக மாடல் ஆட்சி என்று குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளாரே; எடப்பாடி பழனிச்சாமி!

**பெரியதம்பி :** **ஆமாம்பா; அம்மா நடத்திய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில்தானே, ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா, கோட்டைக்குப் போகும் வழியில் பட்டப்பகலிலே அவருடைய முகத்திலே திராவகம் வீசப்பட்டு அது பரபரப்பான செய்தியாக மட்டுமல்ல; அதன் பின்னணி இரகசியங்கள் எல்லாம் பக்கம் பக்கமாக ஏடுகளில் வெளிவந்தனவே !**

**அந்த அளவுக்கு திராவக ஆட்சி மட்டுமல்ல; ஹெராயின், கஞ்சா, குட்கா மாடல் ஆட்சி எல்லாம் நடத்திய ஆட்சியல்லவா அ.தி.மு.க. ஆட்சி. அதனால் தான் எடப்பாடிக்கு எல்லாமே அப்படித் தோன்றுகிறது போலும்!**




முரசொலி
பாசறை

# திராவிட மாடல் அரசு 40

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## அரசுத் திட்டங்களின் துணைவர்கள்!

**திட்டத்தின் பெயர் :** தமிழ்நாடு முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம்

**கால வரம்பு :** இரண்டு ஆண்டுகள் (2022 2024)

**ஒதுக்கப்பட்ட நிதி :** சுமார் 6 கோடி ரூபாய்

**கல்வித் தகுதி :** ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு

**விண்ணப்பித்தவர்கள் :** சுமார் 25 ஆயிரம் பேர்

**முதல்நிலைத் தேர்வில் பங்கேற்றவர்கள் :** சுமார் 14 ஆயிரம் பேர்

**இரண்டாம்நிலைத் தேர்வில் பங்கேற்றவர்கள் :** 605 பேர்

நேர்முகத் தேர்வில் பங்கேற்றவர்கள் : 183 பேர்

**இறுதியாகத் தேர்வு பெற்றவர்கள் :** 30 பேர் (ஆண்கள் 15, பெண்கள் 15 பேர். முறையான இடஒதுக்கீடும் பின்பற்றப்பட்டுள்ளது)

**மாத ஊக்க ஊதியம் :** 75 ஆயிரம் ரூபாய்

அரசு இயற்றும் மக்கள் நலத் திட்டங்கள் எல்லாம் இரவில் யோசித்துக் காலையில் அறிவிக்கப்படுபவை அல்ல. ஒரு திட்டம், அது எவரிடம் இருந்து தோன்றினாலும், அப்படியே நடைமுறைக்கு வருவதில்லை. அதிகாரிகள், ஆய்வாளர்கள், முற்கால அனுபவங்கள், இதர மாநிலங்கள், நாடுகளில் இருந்து பெறும் படிப்பினைகள் எனப் பல திசைகளில் இருந்து கிடைக்கும் யோசனைகள், கருத்துகளின் அடிப்படையில் அந்தத் திட்டம் ஒவ்வொரு நாளும் செழுமைப்படுத்தப்படும்.

ஓர் அரசு இயந்திரம் இப்படித்தான் இயங்கும். பல கட்ட பரிசோதனைகளுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களை, களத்துக்குச் சென்று ஆய்வு செய்து, அவற்றை இன்னும் மக்களிடம் எப்படிக் கொண்டு சேர்க்கலாம், அந்தத் திட்டத்தை இன்னும் எப்படி வலுப்படுத்தலாம், திட்டத்தில் தென்படும் சிறு சிறு இடைவெளிகளை எப்படி நிரப்பலாம் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்ல, கள ஆய்வாளர்கள் தேவை. அவர்கள் அரசுத் திட்டங்களின் இணைச் சக்கரங்களாக இருந்து, மக்கள் நலத் திட்டங்கள் வலுவடைய, வளமடைய, விரிவடைய உதவுவார்கள்.

அப்படியான கள ஆய்வாளர்களை உருவாக்கும் முயற்சியாக, நம் கழகத் தலைவர் முதலமைச்சரின் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு' கொண்டு வந்திருப்பதுதான், 'தமிழ்நாடு முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம்' (சீஃப் மினிஸ்டர் ஃபெல்லோஷிப் புரோகிராம்).

### இளைஞர்கள் மீதான நம்பிக்கை

2021 மே மாதம் நம் கழக அரசு பொறுப்பேற்றவுடன், 2021-2022 சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை மானியக் கோரிக்கையின் போது ஓர் அறிவிப்புச் செய்யப்பட்டது.

அதில் "மாநிலத்தில் உள்ள இளைஞர்களின் திறமைகளில் இந்த அரசு அதிக அளவில் நம்பிக்கை கொண்டுள்ளது. அரசு சேவைகளை மேம்படுத்த இளைஞர்களின் வளத்தைப் பயன்படுத்தி முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் செயல்படுத்தப்படும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, 2022 மார்ச் மாதம் இதுதொடர்பான அரசாணை வெளியிடப்பட்டது. அதில், இந்தத் திட்டத்தை அரசுடன் இணைந்து கல்விப் புல ரீதியாகச் செயல்படுத்த, பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மைக் கல்வியை வழங்குவதில் நீண்ட அனுபவம் உள்ள திருச்சியைச் சேர்ந்த பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் (பாரதிதாசன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட்) தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிறகு, அந்தக் கல்வி நிறுவனம் மூலம் குடிமைப் பணித் தேர்வுகளுக்கு இணையாக இரண்டு கட்ட எழுத்துத் தேர்வு, ஒரு நேர்முகத் தேர்வு என மூன்று கட்ட தேர்வுகள் நடத்தப்பட்டு தகுதியான இளம் ஆய்வாளர்கள் 30 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்கள், நீர் வள ஆதாரங்கள் மேம்பாடு, விவசாயம், வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம், சமூக உள்ளடக்கம், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை மேம்பாடு, திறன் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு, கடன் திட்டங்கள், கலாச்சாரம் மற்றும் பண்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் தரவு நிர்வாகம் என 12 வகையான கருப்பொருள்களின் அடிப்படையில், இந்தக் கருப்பொருள்களின் கீழ் வரும் அரசுத் துறைகளில் பணியாற்றுகிறார்கள். ஒவ்வொரு மாணவரும் இரண்டு மாதங்களுக்கு ஒரு துறை என்ற முறையில் பணியாற்றுவார்கள்.

### அரசுத் திட்டங்களில் நேரடி ஈடுபாடு

மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் தேர்வு செய்யப்பட்டுள்ள இந்த இளம் ஆய்வாளர்கள், பொறியியல், சட்டம், வேளாண்மை எனப் பலவிதமான கல்விப் புலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு ஊக்க ஊதியத்துடன் (ஸ்டைபண்ட்) இரண்டு ஆண்டுகாலப் புத்தாய்வுப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இவர்கள், தமிழ்நாடு அரசின் பல்வேறு முதன்மை மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். மேலும், முதலமைச்சர் அலுவலகம், சம்பந்தப்பட்ட துறைகளின் வழிகாட்டுதலில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்கிறார்கள்..

இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களைக் கண்காணித்து, செயல்பாட்டில் பிரச்சினைகள் இருந்தால் அவற்றைக் களைவதற்கும், திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும், தேவையான முடிவுகளை எடுப்பதற்கும் உதவியாக இருக்கிறார்கள்.

இதன் மூலம், அந்த இளம் ஆய்வாளர்களின் வருங்காலப் பணிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதோடு, அந்த மாணவர்கள் தரும் உள்ளீடுகள் மூலம் அரசுத் திட்டங்களும் செழுமையடைகின்றன. இவ்வாறு, மாணவர்கள், அரசு என இரண்டு தரப்புக்கும் பரஸ்பர பயன் விளைவிக்கும் திட்டமாக முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், தற்போது ஓராண்டு காலத்தைக் கழித்திருக்கிறார்கள் மாணவர்கள். இந்த சேவை முதல் அரசு கட்டுமானத் திட்டங்களில் மாற்றுக் கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்துவது வரை எனப் பல திட்டங்களில், இந்த ஆய்வாளர்களின் பங்களிப்பு இருக்கிறது. அரசுத் திட்டங்கள் பொலிவு பெறுகின்றன என்பது ஒருபக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் வருங்கால அதிகாரிகளை உருவாக்கவும் முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் பயன்படுகிறது என்று சொன்னால், அது மிகையில்லை..!

...சாதனை தொடரும்

**35 வயதுக்கு மிகாமல் உள்ள இந்த இளம் ஆய்வாளர்களில் பலர், ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாராகி வருபவர்கள். இந்தத் திட்டத்தில் அவர்களின் அனுபவம் குறித்துக் கேட்டபோது...**

"இந்தத் திட்டத்தின் மூலம் எங்களுக்கு அரசுத் துறைகள், அரசுத் திட்டங்கள் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து நேரடி அனுபவம் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தின்படி, நாங்கள் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது களத்துக்குச் சென்று மக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகளை அறிய வேண்டும். அப்படிப் பேசும்போதுதான், ஒரு திட்டத்தில் எங்கெல்லாம் இடைவெளி உள்ளது என்பது எங்களுக்குத் தெரிய வருகிறது. அந்த இடைவெளியை நிரப்ப, நாங்கள் அளிக்கும் யோசனைகளையும் அரசு ஏற்றுக் கொள்கிறது.

மேலும், இதர மாநிலங்கள் மற்றும் நாடுகளில் மக்கள் நலத் திட்டங்கள் சார்ந்து பின்பற்றப்படும் சில சிறந்த முறைகளைப் பற்றி, பல ஆராய்ச்சி இதழ்களில் வெளியான கட்டுரைகள் மூலம் நாங்கள் கற்றுக்கொள்கிறோம். அவை குறித்து, அதிகாரிகளுடன் விவாதித்துப் பயனடைகிறோம். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நாங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளுக்குப் 'பாரதிதாசன் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்' நிறுவனம் எங்களுக்கு மதிப்பெண் வழங்குகிறது. இரண்டு ஆண்டுகளின் முடிவில் எங்களுக்குப் 'பப்ளிக் பாலிசி அண்ட் மேனேஜ்மென்ட்' பிரிவில் முதுநிலைப் பட்டயமும் வழங்கும்.

அதனால் நாங்கள் வருங்காலத்தில் ஐ.ஏ.எஸ். தேர்வுகளிலும், இதர நிறுவனங்களிலும் மிக நன்றாகச் செயலாற்ற முடியும் என்று நம்புகிறோம். ஒரே சமயத்தில் கல்வியையும், பணி அனுபவத்தையும் வழங்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் அரசுக்கு எங்கள் நன்றி" என்றார்கள்.

## கிரிக்கெட் அரசியல்!

இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, உலக அளவில் கேலிக்குரிய நிகழ்வாகப் போய்க் கொண்டிருக்கிறது. போட்டி தொடங்கிய நாள் முதல் இன்று வரை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் ஆஸ்திரேலியாவுக்கு இடையே பெங்களூருவில் நடைபெற்ற போட்டியில், பாகிஸ்தான் ரசிகர்கள் சிலர் பாகிஸ்தான் அணிக்கு ஆதரவாக கோஷம் போட, அவர்களை காவல்துறை அப்படிச் சொல்லக் கூடாது என்று எச்சரித்திருக்கிறது.

போலவே, வங்கதேச அணியின் தீவிர ரசிகர் சோயிப் அலி. அவர் புலியைப் போல உடலில் வண்ணமிட்டு தனது ஆதரவை வங்கதேச அணிக்குத் தெரிவிப்பதை வழக்கமாக வைத்திருப்பவர். அதனால் அவருக்கு 'டைகர் சோயிப்' என்ற பட்டப் பெயரும் உண்டு. இந்தியாவுக்கும் வங்க தேசத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியின் போது இவரிடமிருந்த புலி பொம்மையை வாங்கி அதைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள் இந்திய ரசிகர்கள்.

அதிகாரிகளின் ஒடுக்கு முறை ஒரு பக்கம், ரசிகர்களின் பைத்தியக்காரத்தனங்கள் ஒரு பக்கம் என இந்தியாவின் மானம் உலக அளவில் சீரழிந்து கொண்டிருக்கிறது. கிரிக்கெட்டு சிரிக்கெட்டு ஆகிறது!

## :ப்ளாஷ்பேக்



### குடும்பத்துடன் கார்கில் நிதி!

1999-இல் இந்தியா பாகிஸ்தான் இடையே கார்கில் போர் தீவிரம் அடைந்த நேரத்தில், இந்திய வீரர்களின் நலனுக்காக நிதி திரட்ட 'முரசொலி'யில் தலைவர் கலைஞர் கடிதம் எழுத, நிதி குவிய தொடங்கியது. 13.07.1999 அன்று எனது மனைவி ஆர்.கீதா, மகள் ஆர்.பிரியங்கா, மகன் ஆர்.சூரியா ஆகியோருடன் தலைமைச் செயலகத்தில் கலைஞரை சந்தித்து ரூ.3,000 நிதி அளித்தோம். அப்போது கலைஞர், என் மகன் கன்னத்தைத் தட்டி 'உன் பெயர் என்ன?' என்று கேட்டு நிதியைப் பெற்று, ஐயா சண்முகநாதனிடம் கொடுத்து எங்களை வாழ்த்தினார்.



ராமதாஸ்

**-ஆ.ராமதாஸ், ஆலந்தூர் தெற்குப் பகுதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழரசுக்கு ஆதரவு!

**1956-ஆம் ஆண்டு செப்டம்பர் 24-ஆம் தேதி முதல் ம.பொ.சிவஞானத்தின் தமிழரசு கழகத்தினர் வடஎல்லைப் போராட்டத்தினை நடத்தத் தொடங்கினர். மொழிவாரி மாநிலங்கள் அதிகாரப்பூர்வமாக அமையும் நாளில், சித்தூர், திருத்தணி, திருப்பதி போன்ற பகுதிகள் தமிழ் பேசும் பகுதிகளுடன் இணைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கையுடன் இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஏற்கெனவே தனிப் போராட்டங்களை நடத்தி வந்த கழகம், ம.பொ.சி நடத்திய போராட்டத்துக்கு ஆதரவு அளித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 278




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131